உ

# மூளாய்
# வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமான்
# மகோற்சவ சிறப்புப் பாடல்கள்
## (2007)



" பக்தியோடு நாம் பரவசம் கொண்டிட்டால்
சித்தி விநாயகர் கருணை மகத்தானதாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீகத்தின் தந்தையும்
ஆகமத்தின் தந்தையுமான
அமரர்
சிவஸ்ரீ.கு. பாலசுப்பிரமணியக் குருக்கள்



" மாதா பிதா குரு தெய்வம் இவர்
மலரடி தினம் தினம் வணங்குதல் நன்றாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகப் பெருமான்

# சிறப்புப் பாடல்கள்

தந்தைதாய் உலகென்ற தத்துவத்தை உணர்த்திய
வித்தகனே விநாயகனே எழுந்தருள்வாய்
தந்தமது உடைத்தொரு சங்கதியை எழுதிய
உத்தமியின் புதல்வனே எழுந்தருள்வாய்
வந்த இடம் மூளாயூர் வதிரன் புலோ தனில்
நித்தமருள் புரிபவனே எழுந்தருள்வாய்
எந்த நிலை வரும்போதும் நம்பிவரும் அடியவற்கு
சித்தமது குளிரவே நீயருள்வாய் !

தம்பிக்கோர் தாரமதை சிந்தித்து வழங்கிய
தொந்திக் கணபதியே எழுந்தருள்வாய்
தும்பிக் கரம்தூக்கி ஔவையைக் கயிலைவைத்த
முந்தி விநாயகனே எழுந்தருள்வாய்
எம்முயர் மூளாயூர் வதிரன் புலோதனில்
வந்து அருள் புரிபவனே எழுந்தருள்வாய்
இம்மையிலும் மறுமையிலும் உன்னையே நம்பினோம்
தந்து தமிழ் மூன்றையுமே நீயருள்வாய்!

அசுரரை வதம்செய்து அடியாற்கு அருளிய
அப்பனே விநாயகனே எழுந்தருள்வாய்
பசுவின் வாய் அறுகாகி பாலொடு கலந்துபின்
இப்பாரில் பிள்ளையாராய் எழுந்தருள்வாய்
சிசுவாகி மூளாயூர் வதிரன் புலோதனில்
எப்போதும் அருள்பவனே எழுந்தருள்வாய்
விசுவமது காட்டியெம் வினையாவும் தீர்த்தே
ஒப்பரிய வாழ்வெமக்கு நீயருள்வாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிநாம் கும்பிட கோடியின்பம் அருளிய
கோவிந்தன் மருகனே எழுந்தருள்வாய்
தொட்டதோர் கருமத்தின் தொடக்கத்தில் உனையெண்ண
தாவிவரும் கணபதியே எழுந்தருள்வாய்
திட்டமிட்டு மூளாயூர் வதிரன் புரோதனில்
கோவில்கொண்டு அருள்பவனே எழுந்திடுவாய்
பட்டதுயர் போதுமினி பஞ்சமுக நாயகா
பாவியரெம் துயரகல நீயருள்வாய் !

புத்தியொடு சித்தியையும் நீயென்று உணர்த்திய
விண்ணவர் தலைவனே எழுந்தருள்வாய்
பத்திகொண்டு வருவோர்க்கு ஐங்கரம் நீட்டிடும்
எண்ணரிய கணபதியே எழுந்தருள்வாய்
தித்திக்கும் மூளாயூர் வதிரன் புலோதனில்
புண்ணியங்கள் அருள்பவனே எழுந்திடுவாய்
முத்திக்கும் முழுமுதலே உன்னையே நம்பினோம்
பண்ணவனே வந்தெமக்கு நீயருள்வாய்!

பெருங்குளத்துக் கரையோரம் இருந்தெமக்கு அருளிய
மருந்துநிகர் மாமணியே எழுந்திடுவாய்
வருந்துயரம் அனைத்திற்கும் பிரணவத்தால் மருந்தூட்டும்
குருவே எம்கணபதியே எழுந்தருள்வாய்
விருப்போடு மூளாயூர் வதிரன் புலோதனில்
அருட்பார்வை அருள்பவனே எழுந்திடுவாய்
விருட்சமதாய் நாமிங்கு தழைத்தோங்கி வாழ்வதற்கு
கருப்பொருளே கண்திறந்து நீயருள்வாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலோடு அரசிலே முகம்காட்டி அருளிய
வேலோனின் அண்ணனே எழுந்தருள்வாய்
சாலோடு வயலுக்குள் காலூன்றி மகிழ்ந்திட்ட
ஞாலத்து முதல்வனே எழுந்தருள்வாய்
பாலோடும் மூளாயூர் வதிரன் புலோதனில்
சீலத்தை அருள்வோனே எழுந்தருள்வாய்
நாலோடு ஐந்தான உன்கரத்தையே நம்பினோம்
மாலவன் மருகனே நீயருள்வாய் !

ஆனைமுகம் காட்டியெம் காணிநிலத் தருளிய
பானைவயிற்றோனே நீ எழுந்தருள்வாய்
தேனையும் பாகினொடு பருப்பையும் நாம்தர
ஊனையும் உருக்குவோனே எழுந்திடுவாய்
வானையுயர் மூளாயூர் வதிரன் புலோதனில்
ஆணைதந்து ஆழ்பவனே எழுந்திடுவாய்
வீணையொடு மத்தளங்கள் கொட்டியுனை வேண்டுவோம்
தானைக் கணபதியே நீயருள்வாய் !

எருதேறி மிதித்திட ஏரிலெழுந் தருளிய
அரும்பெரும் கணபதியே எழுந்தருள்வாய்
வருந்தியுனை உழவர்கள் நொந்தஇடம் நோக்கிட
குருதிகாட்டி நின்றோனே எழுந்தருள்வாய்
கரும்பாகி மூளாயூர் வதிரன் புலோதனில்
இருந்திடர் தீர்ப்போனே எழுந்தருள்வாய்
துரும்பாகி நம்துயரம் தூசாகி மறைந்திட
மருந்தாகி வந்தெமக்கு நீயருள்வாய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பலனைக் இணற்றிலொரு அற்புதத்தை அருளிய
அன்பிலுயர் தெய்வமே நீ எழுந்தருள்வாய்
துன்பஇருள் அகற்றிட துதிக்கரம் உயர்த்திடும்
பொன்மனத்துக் கணபதியே எழுந்தருள்வாய்
உன்னுயிர் மூளாயூர் வதிரன்புலோ தனில்
முன்னின்று அருள்பவனே எழுந்தருள்வாய்
நின்னருள் வேண்டியேநாம் நித்தமுனை வேண்டுவோம்
உன்னதனே உயர்வாழ்வு நீயருள்வாய் !

கலகத்தை விளைவித்து நியாயத்தை அருளிடும்
கலகத்து பிள்ளையாரே எழுந்தருள்வாய்
உலகத்தை உய்விக்க உச்சிமலை அமர்ந்திட்ட
வலம்புரி நாயகனே எழுந்தருள்வாய்
தலம்கொண்டு மூளாயூர் வதிரன் புலோதனில்
நலம்பல நல்குவோனே எழுந்தருள்வாய்
பலமுந்தன் தலமென்றே வலம்வந்து பணிகின்றோம்
குலக்கொழுந்தே வந்தெக்கு நீயருள்வாய் !

மூளாயூர் தன்னிலோர் மூத்தோனாய் வந்தமர்ந்த
ஏளாம் வீதியோனே எழுந்தருள்வாய்
ஆளாக்கி எமையெல்லாம் அடியாராய் அருளிய
வேளாண்மை நிலத்தோனே எழுந்தருள்வாய்
நாளாக நம்மூளாய் வதிரன்புலோ தன்னில்
நீளாறு ஏக்கமது எழுந்தருள்வாய்
கேளாது தருவோனே வேளமுகத்து ஐயனே
தூளாகித் துயரற நீயருள்வாய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

வாழிநம் மூளாயூர் மூத்தோன் வாழி
வள்ளியொடு தெய்வானை வேலோன் வாழி
நண்ணியிறை பூசை செய்யும் அந்தணர்கள் வாழி
நறுஞ்சைவநெறி வளர்க்கும் பெரியோர் வாழி
எண்ணிறைந்த பாட்டிசைக்கும் புலவோர் வாழி
ஏற்புடனே கேட்டருளும் அடியார் வாழி
வாழிநம் வதிரன்புலோத் தலமூர் வாழி
வளர்சைவநெறி வாழி வாழி வாழி !!

ஆக்கம்
ஆசுகவி
மூளாயூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு
ஆத்மீகத்தின் ஆகமத்தின் தந்தை

அமரர்
சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்
நினைவாக

சித்தி விநாயகர் வர்த்தக நிலையம்,
பிள்ளையார் கோவிலடி,
மூளாய்.

க.பாலச்சந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org